632

பதிவு எண் — M.5720 வெள்ளிக் கிழமைதோறும் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-4 குருகுலம், மாம்பாக்கம்; கர, மாசி; 29—2—52. தளிர்-22

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## பெருமைக் குரியது!

பிறவியில் அடையவேண்டிய பெரிய நிலை நீத்தாராதல்! நீத்தார்—மாசு நீத்தார்; அதனால், தீமைகளையும் போக்கினோர்; ஆகவே, துறவோர் என்றும் இவர் கூறப்பெறுவர்.

மாசு நீங்கிய உள்ளம் தூய்மையாயிருக்கும்; அதனால் நீத்தாரைத் 'தூயோர்' என்றும் சொல்வதுண்டு.

தூய உள்ளத்தில் நன்மைகள் நிறைவது இயல்பு! அந் நன்மையினால் 'நல்லவர்' என்றும், அது நிறைவதனால் 'சான்றோர்' என்றும் அவர் வழங்கப்பெறுவர். சான்றோர்—நிறைந்தவர்.

இனி, நற்கடமைகளைச் செய்வதனால் 'அறவோர்' என்றும், பிற உயிர்கள்மேற் செல்லும் அருள் காரணமாகத் தந்நலங் கருதாத அருளாளராய்ப் பிறர்க்கென வாழ்தலின் 'அந்தணர்' என்றும் அவர் பெயர் பெறுவர்.

இத்தகைய பெருநிலையை அடைவதே பெருமைக்குரியது! இறைவன் இயல்பாகவே பெருமையில் திகழ்கின்றான். பொது மக்கள், பெருமையில் உயர்ந்து வரும் நிலையில் உள்ளனர். ஆதலால், சிறப்பு மக்களாகிய சான்றோரே பெருமையில் உயர்ந்து நிற்பவர் என்று கூறுதற்குரியவர். அதனாலேதான் நீத்தார்க்கு மட்டும் பெருமை கூறினார் ஆசிரியர். 'பெரியோர்' என்பவர் இத்தகையோர்.

சிறந்த மக்களை, நூல்கள், இதனாலேதான் அவர் விழுப்பம் காரணமாகத் தம் துணி பொருளாக வைத்து விரும்பிப் பேச முற்படுகின்றன. நல்ல நூல் எதை எடுத்தாலும் அது சான்றோர் பெருமையிலேயே அதாவது சான்றாண்மைப் பண்பிலேயே சென்று முடிதலைக் காணலாம்.

ஆகவே, நூலாசிரியர்களுக்கு முடிமணியாகத் திகழ்வோர் சான்றோரே என்பது தெளியப்பெறும்.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை
விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை—நன்னடையில் நின்று மன மாசுகளை நீக்கிய நல்லவர்களின் மாட்சியை, பனுவல் துணிவு—நன்னூல்களின் முடிபு, விழுப்பத்து வேண்டும்—அதன் மேன்மை காரணமாக விரும்பி நிற்கும்.

நீத்தார் மன மாசுகள் நீக்கிய தூயோர்; நல்லொழுக்கத்தில் நிலைபெற்று ஒழுகிவருவதனால் மட்டுமே மாசு போக்குதல் கூடுதலின், நீத்தாரை 'ஒழுக்கத்து நீத்தார்' என்று விளக்கிக் கொண்டார்.

பெருமை நீத்தார்க்கே உரியதாகலின், 'நீத்தார் பெருமை' என விதந்தார்.

பயில்வோரது மனக்கோணலை நீக்குவது பனுவல் என்னும் நூலாதலின், அதற்கு நன்னூல் என உரைக்கப்பட்டது.

'துணிவு' என்றதனால் 'முடிந்த பொருளாக' என்பதும், 'விழுப்பத்து' என்றதனால் 'பெருமையின் மேன்மை காரணமாக' என்பதும், 'வேண்டும்' என்றதனால், 'தன் சிறப்பின் பொருட்டு விரும்பி ஏற்று நிற்கும்' என்பதும் பெறப்பட்டன.

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

4-ம் ஆண்டுக் கையொப்பம்

(5-10-51 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம் P. O.

(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கிளை | கர, மாசி, | தளிர் |
|---|---|---|
| 4 | 29-2-52 வெள்ளி | 22 |


## நல்வழிக் கல்வி

கல்வி முதன்மையாய்க் கருதுதற்குரியது; வாழ்க்கையின் பல துறைகளுக்கும் உரியதாய்க் கற்பிக்கப் பெறுமானால், அப்போது அது 'நல்வழிக் கல்வி' யாகும்.

ஒழுக்கத்தில் தவறிய இளஞ் சிறுவரைத் திருத்தி நல்வழியிற் செல்லப் பயிற்சி தரும் பாடசாலைகளில் (Senior Certified Schools) செங்கற்பட்டில் இருப்பதும் ஒன்று. இப் பள்ளியின் ஆண்டுவிழா 27-2-52ல் மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது. இளம் மாணவர்கள் கைப்படச் செய்தமைத்த பொருட்காட்சிச் சாலையும் பெருமக்கள் பார்வைக்கு வைக்கப் பெற்றிருந்தது. ஆண்டு விழாவில் மாணவர்கட்குப் பரிசு வழங்கிய கனம் திரு. பக்தவத்சலம் அவர்கள் பின் வருமாறு குறிப்பிட்டார்கள்.

'இப் பாடசாலை ஆண்டுவிழா ஒரு பெரிய திருவிழாவாகக் காட்சி யளிக்கிறது. ஒழுக்கத்தில் தவறினார்கள் என்பதற்காகவோ, காப்பாற்றுவார் இல்லாமல் விடப்பட்ட ஏழைகள் என்பதற்காகவோ இளஞ் சிறுவர்கள் இத்தகைய பாடசாலைகட்கு அனுப்பப்படுகிறார்கள்.

'இப் பாடசாலையில் மாணவர்களுக்கு வேண்டிய பொதுக்கல்வியோடு, காந்தியடிகள் கருத்துக்கிசைந்த அடிப்படைக் கல்வியும் சொல்லித் தரப் படுகிறது. பொருட்காட்சிப் பகுதியில் நாம் காணும் ஒவ்வொரு பொருளும் இப் பாடசாலையிற் பயிலும் குழந்தைகள் கைப்படச் செய்தவை என்று அறியும் போது நம் உள்ளம் பெருமகிழ்ச்சி யடைகிறது. அப் பொருள்கள் பெரிய தொழிற் சாலைகளில் செய்யப் பெற்றவை போல மிக அழகாகவும் ஒழுங்காகவும் இருப்பது கண்டு, இச் சிறுவர்களா செய்திருப்பார்கள் என்று உள்ளம் விம்மிதம் அடைகிறது. அறிக்கை படித்த தலைமை யாசிரியர், இப்பிள்ளைகளை மஹாபலிபுரம் போன்ற குறிப்பிடத்தக்க இடங்களுக்கு அடிக்கடி அழைத்துச் செல்வதாகவும், படக்காட்சி கூட திங்களுக் கொருமுறை அவர்கள் பார்க்க அநுமதிக்கப் பெறுவதாகவும், முன்போலன்றிக் காவல் கட்டுப்பாடுகள் மிகவும் குறைந்துள்ளதாகவும் இவ்வளவுக்கும் மாணவர்கள் ஒழுங்கு முறையில் செம்மையாகத் திருந்திவருவதே காரணம் என்றும் குறிப்பிட்டதைப் பாராட்டுகின்றேன்.

'வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் மாறி மாறி வருகின்றன. இன்பம் நுகரும்போது மகிழ்வதும் துன்பம் வருங்கால் வருந்துவதும் வீணான செயல். என்றும் ஒரே மாதிரி மகிழ்ச்சியோடு இருத்தல் நலம். இப் பாட சாலையில் என்றும் மகிழ்ச்சியோடு இருந்ததற்காகவே ஒரு மாணவனுக்குப் பரிசு அளிக்கப்பட்டது கண்டு மகிழ்ச்சி யடைகிறேன். சிறுவர்களுக்குப் பரிசு வழங்கும் பொறுப்பு முழுவதையும் அரசியலாருக்கே விட்டு விடாமல் இவ்வூர்ப் பொது மக்களே பெரிதும் உள்ளம் உவந்து பரிசுகள் வழங்க முற்பட்டது மிகவும் பாராட்டத் தக்கது. இச் செயல் இப் பாடசாலைப் பிள்ளைகள் மேலும் ஒழுக்கத்தில் உயர்வடைய ஊக்கமளிக்கும். பிற்கால வாழ்வுக்கு அஞ்சி ஒளியாதபடி மக்களில் ஒருவனாக ஒவ்வொரு சிறுவனையும் உருவாக்கி வெளியனுப்பும் பாடசாலைக்குப் பொதுமக்கள் செய்யும் உதவி, வெளிவரும் மாணவர்களைச் சிறிதும் முனிவு காட்டாது தம்மோடு பழகி நாட்டுக்கு நலம் செய்யும்படி தூண்டுவதேயாகும்' என்று குறிப்பிட்டார்.

இப் பாடசாலையின் எடுத்துக்காட்டு, மற்றப் பொதுப் பாடசாலைகளுக்கும் உரியது. கல்வி, தொழில், நன்னடை, கிளர்ச்சி முதலியன பழகும் சிறுவர்களின் பள்ளிகள், புதிய நல்லுலகத்தை உண்டாக்குவதற்கு எவ்வளவு வாய்ப்பான கருவிகள்! நாட்டிலுள்ள செல்வர்களுக்கு இக் கருத்து மேலு மேலும் வேரூன்ற வேண்டும். நல்ல பள்ளிகளுக்கு அரசினர் துணையும் மிக வேண்டும். நாட்டின் விரைந்த மெய் வளர்ச்சிக்கு இது நல்லது!

# * பருவங்கள் *

(15-2-52 ன்—தொடர்ச்சி)

முதற் பருவமான இளவேனிற் காலம் பருவங்களுக்குள்ளே அரசி போன்றது. இது சித்திரையில் ஆரம்பமாகிறது. இக் காலத்தில் வெயில் மிகுந்து காண்கிறது. ஆயினும் மாலைநேரம் மற்றப் பருவங்களில் எல்லாம் விட அழகு மிகுந்து காணும். வேம்பு பூத்துக் குலுங்கும். மா தீங்கனிகளை ஏந்திக் கண்ணுக்கு விருந்தாய்க் காட்சி அளிக்கும். மாந் தளிர்களைக் குயில்கள் தின்று விட்டுத் தன் தேன்குரலில் காமம் மிகுந்து கூவுகின்றன. பலா காய்த்துக் குலுங்கி நிற்கிறது. மல்லிகை முதலிய மலர்கள் பூத்து இளவேனில் மங்கைக்கு அழகு செய்கின்றன. அந்தி நேரத்தில் வானிலே முளைத்தெழும் திங்கள், பால் போன்ற ஒளியைப் பெருக்குகின்றது. அந்த எழில் மயக்கத்தில் உயிரினங்கள் யாவும் காதல் வேட்கை கொள்கின்றன. இதைத்தான் மன்மதன் உயிரினங்கள் மீது தன் ஆட்சியைச் செலுத்துகிறான் எனக் கவிஞர்கள் கற்பனையழகுடன் சொல்கின்றனர். மேலும், இக் காலத்தைச் சிறப்புச் செய்வது இதற்கே உரித்தான தென்றல் காற்று. மன்மதனின் தூதனாக இத் தென்றலைக் கவிகள் வர்ணிக்கின்றனர்.

இதையடுத்து வரும் பருவம் முதுவேனிற் காலம் எனப்படுவது. இக் காலத்தில் வெயிலின் கொடுமை சற்றுக் குறைந்து காணப்படும். மேல் காற்று மரஞ்செடி கொடிகளை அலைக்கழிக்கும். ஆடிமாதம் இந்த மேல் காற்றுக்குப் பெயர்போனது. ஆடிக் காற்றில் அம்மியும் பறக்கும் எனப் பழமொழி யொன்றும் வழங்குவதை நீ அறிவாய். மேல்திசையிலிருந்து வீசுவதால் இக் காற்றுக்கு மேல் காற்று எனப் பெயர் வந்தது. இக் காலத்தில் புளிய மாம் பூத்துக் குலுங்கும். பவழ மல்லிகை பூத்து நறுமணம் பரப்பும்.

இதையடுத்து வருவது கார் காலம். கார் என்னும் சொல்லுக்கு மேகம் என்று பொருள். இக் காலத்தில் வானத்தில் நீருண்ட கரு மேகங்கள் யானைகளைப் போல் உலவும். முகிற்கூட்டங்களைக் கண்ட சோலையிலுள்ள மயில்கள் தோகை விரித்து நடமிடும். வானம் அடிக்கடி உறுமும். மேகத்தைப் பிளந்து ஓடும் மின்னல், இருண்ட இரவை ஒரு கணம் ஒளியாக்கிப் பின் மறையும். பின், வானம் பிளந்தாற்போல் மழை தாரை தாரையாய்க் கொட்டிப் பூமியைக் குளிர்விக்கும். நீர் வேட்கை கொண்ட சாதகப் பறவைகள் அடிக்கடி கூவுகின்றன. மகிழ், தாழை முதலிய மலர்கள் பூத்து நறுமணம் பரப்புகின்றன. எலுமிச்சை, விளா, கொய்யா முதலிய மரங்கள் கனிகளுடன் நம் உள்ளத்தைக் கவர்கின்றன. மரஞ்செடி கொடிகள்மீது மழை பொழிந்து அவற்றை இன்பமூட்டுகிறது. இயற்கை எங்கும் தண்மை நிலவிக் கண்களுக்குக் குளுமை அளிக்கிறாள் இயற்கைப் பெண். மழை வெள்ளத்தால் ஆறுகள் நிறைந்து சுழித்து ஓடுகின்றன.

அடுத்து வருவது கூதிர்க்காலம். குளிர் மிகுந்த காற்று வீசுவதால் இது கூதிர்க்காலம் எனப் பெயர் பெற்றது. கூதிர் என்னும் சொல் தான் ஊதல் எனத் திரிந்து ஊதல் காற்று வீசுவதாய் மக்கள் வழங்குகின்றனர்.

இக்காலத்தில் குளிர் மிகுந்து காணும். அடிக்கடி மழை பொழியும். பொழுது சாய்ந்ததும் மக்களின் நடமாட்டம் அடங்கிவிடும். பசுமைக் கோலம் பூண்டு விளங்கும் இயற்கை, மரகதச் சேலை உடுத்திய மங்கைபோல் தோன்றுவாள். வயல்களில் செழித்து

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

குருதுலக் கைத்தறிகளில்

நெய்த

**மேல் துட்டைகள்**

(டவல்கள்)

முறுக்கு நூலால் ஆனவை!
தூய்மையான சலவை!
கெட்டியான சாயம்!
அழகிய கரைகள்!

மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

அளவுகள்: 24"X48"
26"X52"
28"X54"
30"X60"

வணிகர்க்கு,

தக்க கழிவுகள் உண்டு!

குருதுலம், மாம்பாக்கம்;

மதுராந்தகம் P. O.

# சிலப்பதிகாரம்

## 19. மாதரியிடம் அடைக்கலம்

'முத்துசாமி'

கோவலன் குணநலத்தை மாடலன் அறிந்தவனாதலால் 'கோவலனைக் 'கருணை மறவ' செல்லாச் செல்வ' 'இல்லோர் செம்மல்' என்று விளித்து "யான் அறிய இம்மையில் நீ செய்தன யாவையும் நல்வினையாகவும், இத் திருத்தகு மாமணிக் கொழுந்துடன் தனியுழந்து போந்தது முன்வினைப் பயனேயோ?" என்றனன்.

நல்லனவே செய்து வாழும் மேன்மக்களும் முன் பிறவிகளில் தீவினை செய்திருந்தால் அதன் பயனாய் இம்மையில் துயருழக்க நேரிடலாம். அங்ஙனம் துயருறுவாரைப் பார்த்த ஆழ்ந்தெண்ணும் அறிவிலா மக்கள் "நல்லன செய்தால் துன்பந்தான் நேரிடுகிறது; தீவினையாளர்கள் தாம் நன்றாய் வாழ்கின்றார்கள்; ஆகவே, தானம் தவம் என்பனவெல்லாம் வீண்வேலை" என்பர். முன்னைத் தீவினையால் துன்பப்படினும் இம்மையிலேனும் நல்லன செய்தாலன்றோ இனி வரும் பிறவிகளிலேனும் மேன்மையடையலாம் என்பதை இந்நூல் கற்ற பின்னரேனும் தெளிந்து அதன்படி நல்லொழுக்கநெறிகளில் நிற்க முயலல் வேண்டும்.

மறையோனாகிய மாடலன் கூறியவற்றைச் செவி மடுத்த கோவலன், "கடையாமத்தில் நான் ஆடையிழந்து எருமை ஏறிப் போகவும், இவளோடு பற்று விட்டோர் அடையும் பேற்றைப் பெறவும், மாதவி மணிமேகலையை அறிவனாகிய புத்தனிடம் சேர்ப்பிக்கவும் கனவு கண்டேன். அதன் பயனாய துன்பம் விரைவில் உண்டாகும்" என்றான்.

மாடலன், கோவலன் கூறியதற்கு ஏற்ப மறுமொழி கூறவில்லை. கூறினால் கோவலன் வருந்துவன். மாற்றியோ திரித்தோ கூறின் பொய்மையாகும். ஆதலால் அத் தீக்கனவைப் பற்றி யொன்றுங் கூறாது, "அறத்துறை மக்கட் கல்லது இப் புறஞ்சிறை யிருக்கை பொருந்தா தாதலின் அக நகர் புகுக" என்றனன்.

மதுரையில் வாழும் மாதரி யென்னும் இடைக்குல முதுமகள் ஒருத்தி புறஞ்சேரியில் எழுந்தருளியிருக்கும் இயக்கிக்கு வழக்கப்படி பாற்சோறு படைத்து வழிபாடும் செய்து முடித்து மீள்கிறவள் அவ்வமயம் அங்கு வந்து கவுந்தியடிகளைத் தொழுதனள்.

இயக்கர் என்பவர் தேவர்களில் ஒரு பிரிவினர். பெண்பால் இயக்கி யென்பது. பாண்டி நாட்டில் இயக்கியை இக்காலத்து இசக்கி யென்கின்றனர். இசக்கியம்மன் கோவில் என்று பல கோவில்கள் அங்கு உண்டு. மாதரி இயக்கியைப் பாற்சோறு படைத்து வழிபட்டாள் என்று கூறியிருக்கப் பிற்காலத்தில் பாண்டி நாட்டில் இசக்கியம்மன் கோவிலில் உயிர்ப் பலியிட்டு வழிபடும் பழக்கம் எப்படி வந்ததோ தெரியவில்லை. அண்மையில் ஆட்சியினர் உயிர்ப்பலியிடுவதைச் சட்டமியற்றித் தடுத்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

கவுந்தியடிகள், பசுக்களைக் காக்கும் கோவலர் வாழ்க்கையில் ஒரு தீங்கும் இல்லையென்று கருதினர். அன்றியும், மாதரி செவ்வியள், தண்ணளியுடையவள் என்று எண்ணிக் கண்ணகியை அவள்பால் அடைக்கலப்படுத்துவதற்கெண்ணிச் சில கூறலுற்றார்.

"மாதரி, கேட்பாயாக. இந்நகரப் பெருவணிகர் கோவலன் தந்தையின் பெயரைக் கேட்பின், பெறுதற்கரிய செல்வத்தினைப் பெற்றதாக எண்ணி இவர்களைத் தங்கள் விருந்தினராக ஏற்றுக் கொள்வார். அதுவரையும் இவள் நின்பால் அடைக்கலம்; இவளை நன்னீராட்டி, கண்ணிற்கு அஞ்சனந் தீட்டி, மலர் சூட்டி, நல்லாடை யுடுத்துக் காவற் பெண்டும் நற்றாயும் நீயேயாகிக் காப்பாற்று. இவள் வழி நடந்து வரும்போது வெயில் வெம்மையால் துன்பமுற்ற தன் கணவன் பொருட்டு வருந்தினளேயன்றித்

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros;
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

தன் பொருட்டுச் சிறிதும் வருந்த வில்லை. கணவர்க்கு இன் துணையாகிய கற்புக் கடம் பூண்ட இத் தெய்வமல்லது பொற்புடைத் தெய்வம் வேறு கண்டிலம். இத்தகைய கற்புடையோர் உளரெனின் வானம் பொய்யாது; வேந்தர் கொற்றம் சிதையாது. தவத்தோர் தரும் அடைக்கலப் பொருளைக் காக்கும் காவல் எளிதாயினும் அதன் பயன் அளவிடற்கரியது. இதனை விளக்கும் ஒரு வரலாற்றினைக் கேட்பாயாக:

“காவிரிப்பூம் பட்டினத்தில் சாவகர் பலர் சூழச் சாரணர் சிலாதலத் தமர்ந்து நல்லுரை சாற்றுங்காலை, அச்சாரணர் முன்னர், பாரோர் காணா ஒளியுடம்புடையவனாய் ஒரு தேவன் தோன்றினன். சூழ்ந்திருந்த சாவகர் சாரணரை வணங்கி இவன் வரவு யாதெனக் கேட்கச் சாரணர் தலைவன் கூறலுற்றான். ‘பல நாள் பட்டினியிருந்து உண்ணும் நோன்புடைய முனிவரை எதிர் கொண்டழைத்து உண்பிக்கும் வழக்கமுடையராய்ச் சாயலன் என்பானும் அவன் மனைவியும் இருந்தனர். வழக்கப்படி ஒரு நாள் ஒரு பெரியாரை அழைத்து உண்பிக்கும்போது ஒரு குரங்கு அச்சத்தோடு சென்று மாதவன் அடி வணங்கி அவன் மிச்சலையுண்டு பசி தீர்ந்து இன்முக நோக்கி யிருந்தது. அம் மாதவன் போகும் போது அக் குரங்கைத் தன் மகனைப் போலக் காக்குமாறு சொல்லிச் சென்றனன். அம் மேலோன் பணித்தபடியே சாயலன் மனைவியும் அதனைக் காத்துவந்தனள். அக் குரங்கு இறந்த பின்னரும் தானம் செய்யும் போது ஒரு கூறு அதற்கும் ஈது அறுக எனச் செய்தனள். தானத்தின் பயனாய் மறுபிறப்பில் வாரணவாசி யென்னு நகரத்து உத்தர கௌத்தன் என்பானுக்குப் புதல்வனாய்ப் பிறந்து முப்பத்திரண்டாவது வயதில் இறந்த பின்னர் தேவ வடிவத்தினை யடைந்தனன். சாயலன் மனைவியின் தானத்தின் பலனால் இவ் வடிவம் பெற்றேன் என்று அறிவிக்கவே இங்குத் தோன்றினன்’. அச்சாரணர் அறவுரைகளைக் கேட்டு நடந்தோரும் சாயலனும் அவன் மனைவியும் குறைவிலா இன்பத்தினையுடைய வீட்டுலகம் புக்கனர்” இவ்வாறு அவ்வரலாற்றினை விளக்கிக் கூறினர்.

அடைக்கலமாகக் காக்கும்படி மாதவனால் விடுக்கப்பட்ட குரங்கு இறந்த பின்னர்ச் சாயலன் மனைவி அதற்காகத் தான் தானமிடும்போது ஒரு கூறு அளிக்க, அதன் பயனாய் வாரணவாசியில் மனிதனாய்ப் பிறந்து அதன் பின்னர்த் தேவ வடிவமும் பெற்றான் என்ற இவ் வரலாற்றினால் இறந்தவர்கள் நல்ல பிறவி யெடுக்கவும் அப் பிறவியில் நலம் பெறவும் இங்குள்ளார் நல்லறங்கள் அவர்களுக்காகச் செய்தால் அவை போய் அவர்களுக்கு நற் பயனை யளிக்கு மென்று தெரிகிறது. இவ்வுண்மையில் நம்பிக்கை கொண்டுதான் பலர் தம் முன்னோரை நினைந்து ஆண்டில் ஒரு நாள் தானம் முதலியவை செய்கின்றனர். சிலர் இறந்தவர்களின் நலத்துக்காகத் தியானிப்பதும் உண்டு.

மேற் கூறிய நீதியமைந்த வரலாற்றினைக் கூறி மாதரிபால் கண்ணகியைக் கவுந்தியடிகள் அடைக்கலப் படுத்த, மாதரியும் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டு மதில் வாயிலைக் கடந்து அகநகரில் தன் இல்லத்துக்கு அழைத்துச் சென்றனள்.

---

நஞ்சன்கூடு பல்பொடி.

பாக்டெரியாரின்




யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, :: சென்னை-1

# * எல்லார்க்கும் எல்லாம் *

"நலங்கிள்ளி"

பொது உடைமையைப் பேசுபவர்களில் பலவகையானவர்கள் உளர். "ஏன் அப்பா சில நாட்களாக நீ பொது உடைமை பேசுவதை நிறுத்தி விட்டாய். முன்பெல்லாம் பொது உடைமையை யாரிடமும் எப்போதும் பேசுவாயே" என்று கேட்டானும் ஒருவன் மற்றொருவனைப் பார்த்து. அதற்கு அவன் பதிலிறுத்தானும்; "முன்பு நான் வேலையற்று இருந்தேன்; எனக்கு வருவாய் ஒன்றும் இல்லை; அப்போது பொது உடைமைப்படி பார்த்தால் எனக்கு 30 ரூபாய் வருமானம் கிடைத்திருக்கும்; ஆனால் இப்போது எனக்கு ஒரு வேலை 80 ரூபாவில் கிடைத்து விட்டது. எனவே, இப்போது எனக்குப் பொது உடைமைத் திட்டம் தேவை இல்லை. ஏன் எனில் அந்தத் திட்டப்படி நான் 50 ரூபாவை இழக்க வேண்டியவனாகி விடுவேன் அல்லவா" என்றானும். இது ஒரு வகை.

மாடி வீட்டில் உள்ளவன் பொது உடைமை பேசினால் எல்லோருக்கும் மாடி வீடுதான் அவசியம் என்றும் அத்தகு நிலை மக்கள் யாவரும் எய்தவே பாடுபட வேண்டும் என்றும் கூறுவன். ஐயாயிர ரூபா சொத்தோ ஐந்நூறு வேலி நிலமோ உடையவன் (ஒரு வேளை) பொது உடைமை பேசினால், அது தங்கள் நிலையில் சிறிதும் இழக்கும்படியான தன்மை இலதான பொது உடைமையாகத்தான் இருக்கும். எனவே மக்கள் யாவரும் தங்கள் நிலையில் இருந்து பொது உடைமைக்காகச் சிறிதும் இழக்கத் தயாராக இல்லை. மாறாக ஊதியம் பெறவே அவாவுகின்றனர். இழக்கும் நிலைதான் தாம் எய்துவம என்று உறுதியாகக் கண்டவர்களோ பொது உடைமை என்றாலே 'எட்டிப்போ' என்று எட்டிக்காயாக வெறுக்கின்றனர்.

இந்த உலகம் தோன்றியது "எல்லார்க்கும் எல்லாம்" என்று இருந்ததான இடத்தில் இருந்துதான். மீண்டும் அது தன் பயணத்தைச் செலுத்துவதோ அதே "எல்லார்க்கும் எல்லாம்" என்று இருப்பதான இடம் நோக்கித்தான். முடிவு அதுவேதான்.

அற்றேல், எல்லார்க்கும் எல்லாம் எய்துங் காலத்தில் முயற்சிகட்கு ஆங்குத் தோற்றமிருக்காதன்றோ. சோம்பல்தானே மக்களை ஆட்கொள்ளும். அதுவேயுமன்றி நுண்ணறிவுடைய புலவனைச் சிந்திக்கமாட்டாத ஒருவனிடமிருந்து பகுத்தறிய இயலாத காரணத்தால் அறிவுக்கும் அதன் காரணமாகிய ஆய்வுக்கும் தரப்பட வேண்டிய உயர்வு அருகிப் பின் இன்றாகி விடுமன்றோ? இத்தகு நிலை நீடிப் பின் கலையும் நுண்கலையும் விஞ்ஞான (இயற்கலையும்)மும் பிறவும் சிறிது சிறிதாகத் தேய்ந்து அன்றோ போகும்? இவை போல்வனவே நம் நாடு மட்டுமல்ல நம் நாட்டைப் போலவே முதலாளித்துவ முகாமில் இருக்கும் பல்வேறு நாடுகள் பொது உடைமையைப் புரிந்து கொள்ளுமுன் விடுக்கும் வினாக்கள் ஆகும்.

இவண் கூறிய வினாக்களுக்குரிய விடை, பொது உடைமை என்னவென்று விளங்குங் காலத்தில் தானே விளங்கிவிடும்.

'தள்ளாவிளையுளும் தக்காரும்
தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு'
குறள்—731.

நாட்டினுடைய இலக்கணத்தைக் கூறப்போந்த பேராசிரியர் திருவள்ளுவர் அந் நாட்டினிடத்தே எல்லோருடைய நிலனும் தள்ளா விளையுள் நல்குவனவாயும் யாவரும் தக்கோராகவும் (அறிஞர்; சான்றோர்) யாவரும் தாழ்வற்ற சமமான செல்வர்களாகவும் ஒருங்கு அமையப் பெற்றிருப்பதுதான் நாடு" என்று சொல்கிறார்.

பரிமேலழகர் கூறிய உரைப்படி உழவர்கள் தள்ளா விளையுள் நல்குபவர்களாயும் அறிஞர்களும் செல்வர்களும் தன்னகத்தே வாழ விளங்குவதுதான் நாடு என்று கொள்ளுவமாயின், அறிஞர்கள் செல்வமற்றவர்களாயும் செல்வர்கள் அறிவற்றவர்களாயும் உழவர்கள் தள்ளா விளையுள் நல்கியும் (இக்கால உழவர்கள் இருத்தல் போல) வறிஞர்களாயும் இருத்தல் கூடும். எனவே; உறுபசியும், ஓவாப்பிணியும் செறுபகையும் சேராததாய்ப் பிணி இன்மை செல்வம் விளைவின்பம் ஏமம் உடையதாய் இருத்தல் வேண்டும் நாடு என்னும் கருத்துடைய வள்ளுவர் கூற்று இதன்று; முற்கூறியதே எனக் கொள்க.

இனி வள்ளுவர் கண்ட அத்தகு உயர்ந்த நிலை உட்டோபியன் (மானசீக) பொது உடைமைதானே ஒழியச் செயல் முறையில் அமையவில்லை. ஏனெனில் நம் நாட்டுச் செயல் வீரர்கள் அதைத் தொழிற் படுத்தவில்லை. தொழிற்படுத்தி இருப்பின் வள்ளுவர் கண்ட பொது உடைமையைத் தமிழ் நாடு காட்டி இருக்கும் பல்லாண்டுகட்கு முன்னரே.

நிற்க, நாட்டில் செல்வர்கள் ஒருபுறம் வாழ ஏழைகள் ஒரு புறம் தாழ இருவேறு சமுதாயம் ஏற்பட்டுவிட்டது மனித சமுதாயத்தில். இதற்குக்காரணம் யாது?

இதற்குக் காரணம் ஆராய்ந்தால் அமிதமான பொருளின் ஒருசார் சேர்க்கை அல்லது ஓரிடத்தில் அமிதமான பொருள் தேக்கம் என்பது பெறப்படும். ஈண்டுப் பொருள் என்பது யாது? பொருளின் தன்மை என்ன? அப் பொருள் எப்படி ஒரு சார் சென்று தேக்கமடைகிறது? இவை யாவற்றிற்கும் நாம் விடை கண்டாகவேண்டும்.

பொருள் என்பது மனிதனின் இன்றியமையாத் தேவைகளையும் ஆடம்பரத் தேவைகளையும் நிரப்புங் கருவி. அந்தப் பொருள் நேர்முகமாகத் தேவைகளைப் பூர்த்தி செய்யினும், மறைமுகமாகப் பூர்த்தி செய்யினும் பொருள் என்ற ஒன்றிலேயே அடங்கும். அஃதாவது பசிக்குத் தேவையானது உணவு. மனிதன் தேவையைப் பூர்த்திசெய்வதும் அது. இந்தப் பொருள் மனிதன் தேவையை நேர்முகமாகப் பூர்த்தி செய்வதாகும். மனிதன் பசிக்குத் தேவையான உணவினைச் சமைக்கும் பாண்டங்கள் பாத்திரங்கள் உண்டே அவைகள் அவன் தன் தேவையை மறைமுகமாகப் பூர்த்தி செய்ய உதவி செய்கின்றன. எனவே மனிதன் தேவையைச் சரிசெய்யும் கருவிகளாம் உணவும் அதைச் சமைக்கும் பாத்திரங்களும் பொருள் என்பதில் அடங்கின.

ஆதி மனிதன் தன் கழனியில் விளைந்த நெல்லை ஈந்து தனக்குத் தேவையான வேட்டி வாங்கினான். நெய்யும் தொழிலாளியோ வேட்டிக்குப் பதில் நெல்லைப் பெற்றுத் தன் வாழ்கையை நடத்தினான். எனவே பலதிறத்த மக்கள் தங்கள் திறத்தால் பல்வேறு பணிகள் புரிந்தாலும், தங்கள் தேவைகளைப் பண்டமாற்றுமூலமாகப் பெற்றுப்பயன் அடைந்தனர். இந்தப் பண்டமாற்று முறையிலே எந்த வகையிலும் செல்வம் ஒரு சார் சென்றடைய நெறி சிறிதும் கிடையாது. ஏனெனில், தான் எவ்வளவு உழைப்பை அந்த நெய்யும் தொழிலாளி தன் துணிமேல் எற்றி இருக்கிறானோ, (அதனால் கிடைக்கும் நெல் அடுத்த துணி நெய்து முடிக்கும் வரையில் இருக்கும்படியானதாக) அந்த அளவேதான் அந்த உழவனிடமிருந்து அவன் பெறுவதும் ஆகும். இந்த இடத்திலே இருவரும் தங்கள் வணிகத்தை முடித்துக் கொள்கின்றனர். தொடர்ச்சி இல்லை. தொடர்ச்சி இல்லையாகதால் இரு வேறு சமுதாயம் ஏற்படக் காரணம் ஆகாது இம்முறை. மற்றெது இத்தகைய இருவேறு சமுதாயம் ஏற்படக் காரணம் என்பதை அடுத்த கட்டுரையில் காணலாம்.

## குருகுல - - வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு
விலை அணா 6.
2. திருமூலர் அருள்மொழிகள்
விலை அணா 4.
3. தணிகைமலை அல்லது அமைதி
விலை அணா 6.
4. நல் வாழ்க்கை
விலை அணா 1.
5. திருக்கழுக்குன்றப் பதிக விளக்கம்
விலை அணா 1.
6. கருக் கலை
விலை அணா 4.
7. மூன்று உண்மைகள்
விலை அணா 3.
8. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்
விலை அணா 9.
9. முல்லைப்பாட்டு அகராதி
விலை அணா 8.
10. திருமுருகாற்றுப்படை அகராதி
விலை அணா 8.
11. தொல்காப்பியம் அகத்திணையியல் விளக்கம்
விலை ரூ. 1.
12. ஆத்திசூடி . கருத்துரை
விலை 0-0-3.

ஷை நூலு அமைந்த கட்டு 1-2-0.

**கிடைக்கும் இடம் :**

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம், P.O., (S. I. R.)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ந்துள்ள நெற்பயிர்கள் பசுமைக் கடல்போல் தோன்றும். குளிர்காற்று பயிர்களைத் தழுவிச் செல்லும்பொழுது அவை வளைந்து தழைவது பசுமைக் கடலில் பொங்கி எழும் அலைகளெனத் தோன்றும்.

அடுத்து வருவது முன்பனிக் காலம். முன்னிரவில் பனி பெய்வதால் இது முன்பனிக் காலம் எனப் பெயர் பெற்றது. மழை ஓய்ந்து விட்டதால் வானம் வெளிவாங்கி யிருக்கும். வெண் மேகங்கள் அன்னப் பறவை போல் நீல வானில் மிதந்து செல்லும். மழைத்துன்பம் நீங்கியதால் புள்ளினங்கள் இனிய குரலில் கானம் இசைத்து விண்ணிலே பறந்து திரியும். ஆற்றிலே பளிங்கு போன்ற தெளிந்த நீர் சலசலப்பொலியுடன் ஓடுவது இயற்கை மங்கை காற்சிலம்பொலிக்க நடமாடுவதுபோல் தோன்றும். நதியின் இரு கரையிலும் அடர்ந்து வளர்ந்த நாணல் பூத்துக் குலுங்கும். பூஞ்சோலைகளில் மலர்ந்துள்ள மஞ்சள் நிறச் செவ்வந்தி மலர்க்கூட்டம் மஞ்சள் பூசிய மெருகுடன் விளங்கும் மங்கையரின் முகத்தை ஒத்திருக்கும். இனிமை நிரம்பிய செங்கரும்பு செழித்து வளர்ந்துள்ள தோட்டங்களும், பயிர் கதிர் கண்டு பழுத்துச் சாய்ந்திருக்கும் பொன் வயல்களும் காண்பவர் உள்ளத்தில் இன்பம் பொழியும். கதிரவன் மறைந்ததும் இருள் உலகைத் திரையிடும். இரவெ[ன்னு]ம் மங்கை பனித்திரை [போ]ர்த்து வருவாள். தாய்மார்கள் தாங்களே பின்னிய கம்பளிச் சொக்காயைத் தங்கள் குழந்தைகளுக்கு அணிவித்து அழகு பார்ப்பர். கதகதப்பை விரும்பும் குழந்தைகள் தங்கள் தாயின் மார்பில் ஒட்டிக்கொள்கின்றன. இக்காலத்தின் பின் பகுதியில் அதாவது தை மாதம் பிறக்கும் நாள் தமிழர்க்கு ஒரு திரு நாளாகும். அன்று மக்கள் புது நெல் கொண்டு பொங்க விட்டுப் பொங்கல் திருவிழா கொண்டாடுவர்.

பிறகு மாசி மாதம் பிறந்ததும் பின்பனிக்காலம் ஆரம்பமாகிறது. பின்னிரவில் பனி பெய்வதால் இதற்குப் பின்பனிக் காலம் எனப் பெயர் வந்தது. இக் காலத்தில் வானம் நிர்மலமாயிருக்கும். ஆறுகள் வற்றி மணல் மேடிட்டிருக்கும். வயல்கள் அறுவடையாகிக் களத்தில் வைக்கோற் போர் எழும்பியிருக்கும். உழவர்களுக்கு இது ஓய்வுக் காலம். அவர்கள் தெருக் கூத்து நாடகம் முதலிய கேளிக்கைகளில் ஈடுபடுவர். காலைநேரம் மனங் கவர்வதாயிருக்கும். விடியற்காலையில் குளிர்காற்று வீசுவதால் படுக்கையை விட்டு எழவே மனம் வராது. விடியற்காலையில் எங்கும் பனி மூடியிருக்கும். யானைக் கூட்டத்திடையே புகுந்து கலக்கும் ஒரு வீரனைப் போல் கதிரவன் தன் கதிர் வாளைக் கொண்டு பனிக் கூட்டத்தை விரட்டியடிப்பான். அவை முத்து முத்தாய்க் கண்ணீர் சிந்திவிட்டு மறையும். அவை சிந்திய கண்ணீர் மரகதப் பசும் புல் தரையில் அமர்ந்து கதிரவனின் பொற்கதிர்கள் பட்டு முத்துக்கள் போல் ஒளிரும். சற்று நேரத்திற்கெல்லாம் இளங் கதிரவன் தன் பிஞ்சுக் கைகளை நீட்டி அம் முத்துக்களைத் தன் காதலி கமலத்திற்குப் பரிசளிக்கும் ஆசையில் திரட்டுவான்.

பசும்புல் தரையின் மீது கொலுவீற்றிருக்கும் பனி நீரும், மூங்கில் இலைமீது தூங்கும் பனி நீரும் கவிஞர் பலரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுள்ளன. அவற்றைப் புனைந்து பல கவிகள் பாட்டிசைத்திருக்கின்றனர்.

“மூங்கில் இலைமீது தூங்கும்
பனிநீரே
தூங்கும் பனிநீரை வாங்கும்
கதிரோனே”

என்று வழங்கும் நாடோடிப் பாடலில் உள்ள அழகிய காட்சியை நாம் இக்காலத்தில் கண்டு இன்புறலாம்.

இங்ஙனம் ஆறு பருவங்களிலும் இயற்கை மங்கை ஒவ்வொரு கோலம் பூண்டு உலகை ஆள்கிறாள்.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர்; இ. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்).